

# கடைசிகால தீர்க்கதரிசனங்கள்

# 6

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

# ஆனால் அவள் நியாயத்தீர்ப்பிற்கு ஆயத்தமாயிருக்கிறாள். அது வந்து கொண்டிருக்கிறது. கோடிக்கணக்கானோர் மடிந்து போவர்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 57-09-01M எபிரெயர், மூன்றாம் அதிகாரம், September 01, 1957

4. ஆகையால் அந்த ரோஸல்லா முடிவாக எங்காவது ஊழியக் களங்களுக்குள் திரும்புவாள் என்று நான் நம்புகிறேன். **ஏனென்றால் அமெரிக்கா சுவிசேஷத்தை விரும்புகிறதில்லை**.

நீங்கள் அதை அறிவீர்கள். நாம் அதை அப்படியே நன்கு ஒப்புக்கொள்ளலாம், அதாவது இந்த ஆங்கிலேய இன மரபின மக்களும் முடிவுற்றுவிட்டனர். அவ்வளவு தான்.

**அமெரிக்கா இனி ஒருபோதும் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாது.**

ஓ, நீங்கள் இடையிடையே ஒரு சிலவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**ஆனால் சுவிசேஷத்தை பொறுத்தமட்டில் அது முற்று பெற்று விட்டது.**

**உங்களால் அவர்களுக்கு பிரசங்கிக்க முடியாது, அவர்களிடத்தில் பேசவும் கூட முடியாது. அவர்கள் எதையுமே விசுவாசிக்க மாட்டார்கள்.** புரிகிறதா?

அவர்கள் தங்களுடைய சொந்த தலைகனம்பிடித்தக் கருத்துகளை வைத்துக் கொண்டு, அவைகளையே நிலைநாட்டி யுள்ளனர்.

**இந்த தேசத்திற்கான நியாயத்தீர்ப்பே அடுத்த காரியங்களாகும்.** அவள் அதையும் கூடப் பெற்றுக் கொள்ளப் போகிறாள்.

அது ஒருகால் கிளர்ச்சியின்மையினூடாக (depression - மந்தநிலையினூடாக) இருக்கலாம்.

**அது அணுகுண்டினூடாக இருக்கலாம்.**

**அது ஒரு பெரிய வாதையினூடாக, ஒரு வியாதியினூடாக அல்லது வேறேதோ ஒரு காரியத்தினூடாக இருக்கலாம்.**

**ஆனால் அவள் நியாயத்தீர்ப்பிற்கு ஆயத்தமாயிருக்கிறாள்.**

**அது வந்து கொண்டிருக்கிறது.**

**கோடிக்கணக்கானோர் மடிந்து போவர்.**

4 And so I believe that—that Rosella will finally turn into the mission fields somewhere, because America doesn't want the Gospel.

You know that. We just might as well admit that, that, this Anglo-Saxon people is finished. That's all. There's no more Gospel that America will receive. Oh, you get a few stragglings, now and then. But, just as the Gospel, it's over. And you can't even preach to them, can't talk to them. They won't believe nothing. See? They just got their own hardheaded ideas, and they're set.

And the next things for this nation is judgment. She is going to have it, too. It may be through depression. It may be through an atomic bomb. It may be through a great plague, a disease or something, but, she is ready. It's coming. Thousands times thousands will fall.



# இங்கிலாந்து மிகவும் சீர்கெட்ட நிலையை அடைந்துள்ளது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-07-26M காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டு கொள்ளுதல்

ஒரு நாள் இயேசு எருசலேமை நோக்கியவாறு இவ்விதம் கூறினார் "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளை கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன், உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று. மத். 23:37

56 இதனை நான் ஒரு ஒப்பிடலாகக் கூறவில்லை. அன்று காலை 10 மணியளவில் அந்த வேசியின் சபையை நான் தரிசனம் கண்ட போது, பரிசுத்த ஆவியானவர் கண்ணீர் வடிப்பதை என் இருதயத்தில் உணர்ந்தேன்... "எருசலேமே, எருசலேமே,..... எத்தனைதரம்" நான் உன்னைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன். ஆனால் நீ என்ன செய்தாய்? உன்னிடம் நான் அனுப்பின தீர்க்கதரிசிகளைக் கொன்று போட்டாய். இன்று சபைக்கு அனுப்பப்பட்டுள்ள செய்தி ஸ்தாபன கோட்பாடுகளினால் கொலை செய்யப்படும் விதமாய், அவர்களை "நீ வாழும் உன் காலத்தை மாத்திரம் அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும். ஆனால் இப்பொழுதோ காலதாமதமாகி விட்டது" என்றார். இன்றைய சபைகளும் அதே நிலையில்தான் உள்ளன.

அவள் இனி மீட்கப்படமுடியாது என்பதை மனப்பூர்வமாக நம்புகிறேன். அதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர் களோ, அது உங்கள் சொந்தக் கருத்து. ஆனால் இப்பொழுது நான் கூறியது என் கருத்தாகும். நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது கிடையாது. என்னைப் பொறுத்தவரையில், கடந்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளாகவே அவள் மீட்கப் படமுடியாத நிலையை அடைந்துவிட் டாள். சிக்காகோ பட்டினத்திற்கு இப்பொ ழுது நேர்ந்துள்ளது என்னவென்பது, அவளையறிந்தவர்க்குத் தெரியும். அது தொடர்ந்து நீடிக்கும். என் பெயர் அவள் பெயருக்கு முன்னால் இருப்பதை கவனிக் கவும். இது "கர்த்தர் உரைக்கிறதாவது." அவள் படிப்படியாக விழுந்து போவ தைக்காண்பீர்கள்.

57. 1933 ஆண்டு நான் கண்ட தரிசனத்தை நினைவுகூருங்கள், இக்கடைசி காலத்தில் பெண்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்று நான் முன்னறிவித்தது நினைவிருக்கிறதா? முசோலினி ஹிட்லர் என்பவர் மர்மமான முடிவையடைவார்கள் என்றும், உலகின் மூன்று பெரிய தத்துவங்கள் கம்யூனிஸத்துடன் ஒருங்கிணையும் என்றும், வாகனங்கள் முட்டை வடிவில் அமைந்திருக்கும் என்றும், பெண்கள் ஆண்களின் உடைகளை அணிவார்கள் அவர்களுடைய உள்ளாடை போன்ற உடைகளையும் கூட உடுத்த அத்தியிலை போன்ற உடைகளை அணிவார்கள் - என்றும், ஒழுக்கங் கெட்டவர்களாய் எவ்விதம் நடந்து கொள்வார்கள் என்றும் அத்தரிசனம் காண்பித்தது. இப்பொழுது அவர்கள் என்ன செய்திருக்

கிறார்கள் என்பதைக் கவனியுங்கள். அது உங்கள் கண்களுக்கு முன்பாக நிற்கிறது.

58 கிறிஸ்தவ பெண்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர், அவர்கள் மேல் தங்கியிருக்கும் ஒழுக்கங்கெட்ட ஆவி பிசாசினால் உண்டானது என்பதை அறிந்திருந்தால் நலமாயிருக்கும். அந்த ஒழுக்கங்கெட்ட ஆவிதான் அவர்களை மயிர் கத்தரிக்கத் தூண்டுகின்றது. பிசாசு மாத்திரமே அவர்களை அவ்விதம் செய்யத்தூண்டுவான். அப்படி செய்வது வேதத்திற்கு முரணான செயலாகும். ஏதோன் தோட்டத்தில் இருந்தது போலவே இப்பொழுதும் உள்ளது. பெண்களோ, "அந்த உருளும் பரிசுத்த போதகர்..." என்று எள்ளி நகைத்து, அதை உதறித் தள்ளுகின்றனர். ஆனால் நான் அவ்விதம் கூறவில்லை. நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று நான் சுயமாக ஒன்றும்

கூறவில்லை. வேதத்தில் கூறியுள்ளதை மாத்திரமே நான் எடுத்துரைக்கின்றேன். அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கின்றனர். இயேசு ஒருமுறை, "என்னை ஆண்டவர் என்று அழைக்கின்றீர்கள். நான் செய்யவேண்டு மென்று கூறும் செயல்களை நீங்கள் செய்வதில்லை" என்று கூறினார். அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கவே முடியாது. நான் அவர்கள் மேல் தீர்ப்புரைக்கும் நீதிபதியல்ல. ஆனால் தேவனுடைய வார்த்தை கூறுவதையே நான் எடுத்துரைக் கின்றேன். இந்த வார்த்தை அனைத்தும் இயேசு கிறிஸ்துவினுடைய வெளிப்பா டாகும். அவர்கள் மேல் தங்கியுள்ள நெறி தவறிய ஆவி பிசாசு என்பதை மாத்திரமே பெண்கள் அறிந்துகொண்டால் நலமா யிருக்கும். **இதுவரை என் வாழ்க்கையில் நான் கண்டுள்ள மிக நெறி தவறிய ஸ்தலம்**

**இந்தியானாவிலுள்ள ஜெபர்ஸன்வில் பட்டின மாகும்.** நான் ஹாலிவுட்டுக்கு சென்றிருக் கிறேன். உலகம் பூராவும் நான் சுற்றி வந்திருக்கிறேன். எல்லாவித ஆபாச செயல்களையும் நான் கண்டிருக்கிறேன். பாரிஸ் நாட்டிலும் இங்கிலாந்திலும் அவைகளைக் கண்டிருக்கிறேன். **இங்கி லாந்து மிகவும் சீர்கெட்ட நிலையை அடைந்துள்ளது. ஒருநாள் இங்கிலாந்து தண்ணீரில் மூழ்கிவிடும் என்று நான் நினைக்கின்றேன். அது அவளுக்குத் தகுதி யுள்ளதாகும். அசுத்தம், குப்பை, அழுகு... இங்கிலாந்து உலகின் நெறி தவறிய சாக் கடை தேக்கமாக** (cesspool) **திகழ்கின்றது. என் வாழ்க்கையில் நான் இதுவரை கண்டவர்களில், வேதத்தை அதிகமாக மறுதலிப்பவர்கள் இங்கிலாந்து நாடாகும். அவள் சத்தியத்தைப் புறக்கணித்ததன் விளைவாக அவ்விதம் இருக்கிறாள். பில்லி கிரஹாம் தம்முடைய மனைவியைப் பூங்காக்**

**களை விட்டு வெளியே அழைத்துக்கொண்டு போக வேண்டியிருந்ததாகக் கூறினார், வெளியே அந்த பூங்காவில் ஆண்களும், பெண்களும், சிறு பையன்களும், சிறு பெண்களும் வெளிப்படையாக ஆபாச செயல் களில் ஈடுபடுகின்றனர். அவள் ஒரு சாக்கடை நீர்த்தேக்கமாக ஆகிவிட்டாள். பிரான்சும், உலகிலுள்ள மற்ற நாடுகளும் அதே நிலையில் உள்ளன - ஐக்கிய நாடு களும் கூட இப்பொழுது அமெரிக்கா அவர்கள் அனை வருக்கும் தலைமையாக விளங்குகின்றாள்.** அவளைக் கவனியுங் கள். அமெரிக்க பெண்கள் அவர்கள் தலைமயிரைக் கத்தரித்து, அரைக்கால் சட்டைகளையும், ஆண்கள் உடுக்கும் மேல் சட்டைகளையும் (slacks) அணிந்து கொண்டு, புகை பிடித்து, அதே சமயத்தில் தங்களை விசுவாசிகள் என்றும் அழைத்துக் கொள்கின்றனர். சகோதிரியே, நீ அதை உணருவதில்லையா?... மன்னிக்கவும். என்

சகோதரி அத்தகைய செயல்களைப் புரிய மாட்டாள். அது பிசாசினால் உண்டானது என்பதை நீங்கள் உணரவேண்டும்.




ஒருநாளில் அவர்கள், நீங்கள்
பரலோகம் செல்வதற்கு வேறெங்கோ
பறந்து செல்ல அவசியமிராது என்றும்,
நீங்கள் இங்கேயே இருந்துகொண்டு,
இதைக்காட்டிலும் வேகமான வேறொரு
பரிமாணத்தை (dimension)
அடைவீர்கள் என்று கண்டுபிடிக்கப்
போகின்றனர்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 65-08-22M கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார்

***63.*** *என்றாவது ஒருநாளில் அவர்கள் ஆயிரத்தறுநூறு கோடி 'லைட் இயர்' (Light-year) விண்வெளி காணவில்லை என்று கண்டுபிடிக்கப்போகின்றனர் ('லைட் இயர்' என்பது ஒளியை அளக்கும் தூரம். ஒரு வினாடிக்கு 1,85,000 மைல் வேகத்தில் செல்லும் ஒளி, ஒரு ஆண்டில் செல்லும் தூரமே ஒரு 'லைட் இயர்' என்னப்படுகின்றது - தமிழாக்கியோன்).* **அவர்கள் வட்டம் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றனர்.**

**ஒருநாளில் அவர்கள், நீங்கள் பரலோகம் செல்வதற்கு வேறெங்கோ பறந்து செல்ல அவசியமிராது என்றும், நீங்கள் இங்கேயே இருந்துகொண்டு, இதைக்காட்டிலும் வேகமான வேறொரு பரிமாணத்தை (dimension) அடைவீர் கள் என்று கண்டுபிடிக்கப் போகின் றனர்.**

*இந்த அறை முழுவதிலும் நிறம் வந்து கொண்டேயிருக்கின்றது.*

*நீங்கள் அணிந்துள்ள மேல் சட்டை யின் நிறம், நீங்கள் அணியும் ஆடைகள் அனைத்தும் நித்தியமாயுள்ளது. ஏனெ னில் அவை பதிவு செய்யப்பட்டு, உலகம் முழுவதும் சுற்றி சுற்றி வருகின் றது.*

**ஒவ்வொரு முறையும் நீங்கள் கண் இமைக்கும் போதும், அது பதிவு செய்யப்படுகின்றது. கவனியுங்கள், தொலைக்காட்சி (Television) அதை நிரூபிக்கின்றது.**

*64. நீங்கள் பிறக்கும்போது, தேவன் ஒளி, ஒலிப்பதிவு ஒன்றை ஆரம்பிக்கின்றார்.*

*சிறிதுகாலம் அது அதிக சத்தமிடுவதில்லை - அந்த சிறு குழந்தை கணக் கொப்புவிக்கும் வரைக்கும்.*

*அதன் பின்பு சத்தம் தொடங்குகின்றது.*

**அவைகளுக்கெல்லாம் அவன் கணக் கொப்புவிக்க வேண்டியவனாயிருக்கிறான்.**

*அவனுடைய வாழ்க்கை முடிவடைந்த பிறகு, அந்த ஒலிநாடா அல்லது இசைத்தட்டு வெளியே எடுக்கப்பட்டு, தேவனுடைய சேமிப்பு நிலையத்தில் வைக்கப்படுகின்றது.*

**நியாயத்தீர்ப்பின்போது, நீங்கள் எவ்வாறு தப்ப முடியும்?**

**அது உங்கள் முன்னால் போட்டுக் காண்பிக்கப்படும் - நீங்கள் அசைத்த ஒவ்வொரு அசைவும், உங்கள் சிந்தனையில் எழுந்த ஒவ்வொரு நினைவும்.**

*உங்களால் அதைப் புரிந்து கொள்ள முடிகிறதா? இப்பொழுது தேவன் எங்கே என்று காணமுடிகிறதா?*



# அவைகள் அநேக மாதங்கள் மனிதரை வேதனைப்படுத்தும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-08-15 இதை அறியாமலிருக்கிறாய்

*135. இந்த மாதம் 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' படித்தீர்களா?*

*மனிதரும் ஸ்திரீகளும் இப்படியாக... 20, 25 வயதான பெண்களுக்கு மாத விடாய் நின்று விடுகிறதாம்.*

*விஞ்ஞானத்தின்படி வாழ்க்கையில் ஏற்படும் இந்த மாற்றம் நடுத்தர வயதில் நிகழவேண்டும்.*

*என் காலத்தில் அது 30 அல்லது 35 வயதில் உண்டானது.*

என் தாயாரின் காலத்தில், ஒரு ஸ்திரீக்கு 40 அல்லது 45 வயதாகும் வரைக்கும் மாதவிடாய் நிற்பதில்லை.

அதன் காரணம் என்ன? விஞ்ஞானத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கலப்படமான உணவு மானிட சரீரத்தையே குலைத்து விட்டது - நாம் அழிந்து போய்க் கொண்டிருக்கிறவர்களாகி விட்டோம்.

மானிட உடல் நிலைகுலைந்து காணப்பட்டால், அதிலுள்ள மூளை அணுக்களும் அந்நிலையில் தான் இருக்குமல்லவா?

**136.** இப்பொழுது, ஆவி இதை ஆமோதிப்பதை பாருங்கள்.

கர்த்தரின் நாமத்தினால், ஒரு நேரம் வரப்போகிறது.

அப்பொழுது ஜனங்கள் முழுவதும் பைத்தியம் பிடித்தவர்களாய் ஆகிவிடு வார்கள். வேதம் அவ்வாறு கூறுகின்றது.

அவர்கள் பயத்தில் கூக்குரலிட்டு அலறுவார்கள் - தங்கள் மனதில் பெரிய பயங்கரமானவைகளை கற்பனை செய்து கொண்டு. வானொலிகளும் தொலை காட்சிகளும் அத்தகைய பயங்கரமான காட்சிகளை காண்பிக்கின்றன. 14 மரங் கள் உயரமுள்ள எறும்புகள் இப்பூமியில் தோன்றும். 4 அல்லது 5 மைல்கள் நீளமுள்ள சிறகுகள் கொண்ட பறவை பூமியில் பறந்து செல்லும், ஜனங்கள் அதைக் காண்பார்கள். அவர்கள் இரக்கத் துக்காக கதறி கூச்சலிட்டு அலறுவார் கள். அது வாதையாயிருக்கும். வாதைகள் உண்டாவதைக் குறித்து நான் பிரசங் கிக்கும் வரைக்கும் காத்திருங்கள்.

*137.* *மோசே என்ன செய்தானென்று பாருங்கள் - மனிதனாக, ஆவியாக அல்ல. அவர், "மோசே..." என்றார்.*

*தேவன் மோசேயிடம், "அங்கு போ" என்றார் (அவருடைய தீர்க்கதரிசியிடம்), "கை நிறைய புழுதி எடுத்துக்கொண்டு அதை ஆகாயத்தில் எறிந்து,* **'கர்த்தர் உரைக்கிறதாவது**, *பூமியில் வண்டுகள் தோன்றும்' என்று சொல்" என்றார்.*

*அப்பொழுது ஒரு வண்டும் இல்லை.*

*முதலாவதாக ஏதோ ஒன்று புதரில் மெல்ல நகர்வதைக் கண்டனர்.*

*பிறகு பார்த்தபோது, வேறு சில வண்டுகள் தோன்றின.*

*சிறிது கழிந்து அவை மிக அதிக மாகப் பரவி, அதன் வழியாக நடக்கவே முடியவில்லை.*

*அவை எங்கிருந்து வந்தன? தேவன் சிருஷ்டி கர்த்தர்! அவருக்கு சித்தமா னதை அவர் செய்ய முடியும் அவர் இராஜாதிபத்தியம் உள்ளவர்.*

*அவர் பூமியின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரைக்கும் சிறகுகளைக் கொண்ட ஒரு பறவையை சிருஷ்டிக்க முடியும்.*

*138. அவன் "ஈக்கள் உண்டாகக்கட வது" என்றான்.*

*அவை மிக அதிகமாகப் பெருகி, பூமி முழுவதையும் கம்பளம் போல மூடினது.*

தேசத்தில் ஒரு ஈ கூட இல்லை. முதலில் ஒரு மாட்டு ஈ சுற்றிலும் பறந்து வந்தது. பிறகு 8, 10, 12, ஈக்கள் தோன்றின.

அதன் பிறகு அதன் வழியாக யாரும் நடந்து செல்ல இயலவில்லை.

சிருஷ்டி கர்த்தராகிய தேவன் தமது வார்த்தையை காத்துக் கொள்கிறார்.

139. தேவனுடைய கட்டளைக்கு இணங்கி மோசே தன் கோலை நீட்டி "தவளைகள் உண்டாகி பூமியை நிரப்பக் கடவது" என்றான்.

தவளைகள் உண்டாகி, அவர்கள் அவைகளைக் குவியல் குவியலாகக் குவித்தனர்.

எங்கும் துர்நாற்றம் - ஒருக்கால் 40 அல்லது 50 அடிக்கு தவளை குவியல்.

அவை பார்வோனின் பாத்திர அலமாரிக்குள் நுழைந்தன.

அவை... போர்வையைத் திருப்பி னால் அதனடியில் 500 தவளைகள்.

அவை படுக்கைகளிலும், மிதியடிகளி லும் இருந்தன. எங்கு பார்த்தாலும் தவளைகள், தவளைகள், தவளைகள்.

அவை எங்கிருந்து வந்தன? சிருஷ்டி கர்த்தராகிய தேவன் இராஜாதிபத்திய முள்ளவர்! அவர் என்ன உரைத்தாரோ, அதை நிறைவேற்றுவார்.

**140. அவர் பயங்கரமான காட்சிகள் பூமியில் தோன்றுமென்று உரைத்தார்.**

**ஸ்திரீகள் கூந்தலைப்போன்ற கூந்தல் கொண்ட வெட்டுக்கிளிகள் (வெளி. 9.7) - கூந்தலைக் கத்தரிக்கும் ஸ்திரீகளைப் பீடிப்பதற்காக நீண்ட கூந்தல்.**


**சிங்கங்களின் பற்களைப் போன்ற பற்கள், தேள்களின் கொடுக்குள் போன்ற கொடுக்குகளைக் கொண்ட வால்கள்.**

**அவைகள் அநேக மாதங்கள் மனிதரை வேதனைப்படுத்தும்.**

*141. வாதைகளையும், முத்திரைகளையும், ஏழு இடிமுழக்கங்களையும் திறக்க நமக்கு நேரம் வரும் வரைக்கும் காத்திருங்கள்! என்ன நடக்கப்போகிறதென்று பாருங்கள்.*

*ஓ, சகோதரனே, நேரமுள்ள போதே நீ கோசேனுக்கு போய்விடுவது நல்லது.*

இந்த வெளிப்புறத்துக்கு எந்த கவனத்தையும் செலுத்தாதே.



# கவனியுங்கள், கடைசி நாட்களில், அவர்கள் (வைரஸ்) கிருமிகளைக்கொண்டு போர்தொடுப்பார்கள் (germ warfare) என்று வேதாகமம் முன்னுரைக்கிறது என்பதை அறிவீர்களா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 54-07-19A தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி

*நம்முடைய நேரம் போய்க் கொண் டிருக்கையில், இதோ துரிதமாக, ஒரு காரியத்தை நான் கூறட்டும்.*

**கவனியுங்கள், கடைசி நாட்களில், அவர்கள் (வைரஸ்) கிருமிகளைக் கொண்டு போர்தொடுப்பார்கள் (germ warfare) என்று வேதாகமம் முன் னுரைக்கிறது என்பதை அறிவீர்களா?**

**அந்த வியாதிகள் ஜனங்கள் மேல் வெடித்து கிளம்பி, பரிசுத்த ஆவியின்**

ஞானஸ்நானம் இல்லாத எல்லார் மேலும் விழும் என்பது தெரியுமா?

ஆனால் அந்த தூதனிடம் அல்லது இந்தக் கொள்ளை நோய்களின் மேல் உத்தரவைக் கொண்டிருந்த தூதனிடம், முத்திரை தரித்திருந்த யாதொருவனை யும் தொடக்கூடாது என்ற கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது.


அது தேவனுடைய
வாதைகள்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

---

செய்தி: 60-02-29 வருகின்ற புயல்

---

*107.* **இந்த அற்புதமான குமாரனின் ஒளியில் இராதவர்களின் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகள் பட்சிக்கும் காலம் ஒன்று வரும் என்று எனக்கு வேதாகமத்தில் கூறப்பட்டள்ளது, வியாதி கள் பாதையில் வந்து கொண்டிருக் கின்றன, மருத்துவர்கள் அதை தடுத்து நிறுத்தமுடியாது. அது தேவனுடைய வாதைகள்.**

*108. இன்று நமக்குள்ள மருத்துவர் களை காட்டிலும் அதிக திறன் பெற் றிருந்த எகிப்திய மருத்துவர்களால் தேவ*


னுடைய வாதைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அங்கிருந்த குறி சொல்பவர்களும், போலியாட்களும் அப்படி செய்ய முடியவில்லை.

தேவனுடைய ஜனங்களை ஆட்டுக் குட்டியின் இரத்தத்தின் கீழ் ஒன்றாக சேர்த்து வைக்க கோசேனில் தேவ னுடைய வல்லமை அவசியமாயிருந்தது!

*109. பரிசுத்த ஆவியே இன்று வாசல்.*

**பரிசுத்த ஆவியே இன்றைய பாதுகாப்பு.**


ஒரு நாள் வரப்போகிறது. அப்பொழுது மனிதரின் மாமிசம் அழுகி, அவர்கள் மரிப்பதற்கு முன்பே பருந்துகள் அவர்களுடைய மாமிசத்தைத் தின்னத் தொடங்கும் என்று வேதம் கூறுகின்றது
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 60-05-22E புத்திரசுவிகாரம் #4

*46. புற்றுநோய் பயங்கரமானது என்னும் கருத்தைக் கொண்டிருக்கிறீர்களா?*

**ஒரு நாள் வரப்போகிறது. அப்பொழுது மனிதரின் மாமிசம் அழுகி, அவர்கள் மரிப்பதற்கு முன்பே பருந்துகள் அவர்களுடைய மாமிசத்தைத் தின்னத் தொடங்கும் என்று வேதம் கூறுகின்றது.**

**அதனுடன் புற்றுநோயை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, புற்றுநோய் சாதாரண பல்வலியைப் போன்றது.**

**ஆனால், தேவனுடைய முத்திரையைத் தரித்திருப்பவர்களை அந்த**

பயங்கரமான வியாதி தொடக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த பயங்கரமான வாதைகள் ஜனங்களைத் தாக்குவதற்கு முன்பே நாம் உள்ளே நுழைந்து, தேவனுடைய ராஜ்யத்தில் நமது ஸ்தானத்தில் பொருத்தப்பட வேண்டும் என்று ஆவல் கொண்டிருக்கிறோம்.

## (வேதாகமத்தில்) அங்கே அந்தத் தூதன் அவருடைய கோபாக்கினையை ஊற்றி, வியாதிகள் வெடித்துக்கிளம்பின போது, மனிதர்கள் தாங்கள் நின்று கொண்டிருக்கும் இடத்திலேயே அவர்களுடைய மாமிசமும் கூட அழுகிப்போய்விடும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 54-07-19A தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி

*44. ஆனால் பார், நண்பனே, அங்கே ஒரு சபை எழும்பும் அந்த நேரம் வருகிறது.*

*நமக்கு தெய்வீக சுகமளித்தலுக்கே விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியா விட்டால், எடுத்துக்கொள்ளப்படுதலுக் கேற்ற விசுவாசத்தை நாம் எவ்வாறு கொண்டிருக்கப் போகிறோம்?*

*நண்பனே, நாம் வெளியே போயாக வேண்டும்.*

நாம் இருக்கிற இந்தப் பழைய, மந்தமான சபையின் நிலையை விட்டு வெளியே வந்தாக வேண்டும்.

நாம் இதிலிருந்து விலகிச் சென்று, நாம் செய்து கொண்டிருக்கும் காரியங் களிலிருந்து மிகவும் வித்தியாசமான ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவோம் *(Launch out)*.

கரையோடு இணைக்கும் கயிறுகளை *(shorelines)* வெட்டி எறிந்து விட்டு, பயம் மற்றும் சந்தேகத்தின் உணர்வுகள் எல்லாவற்றையும் இழந்து, யாவும் கைகூடும் ஏதோவொரு இடத்திற்குள் வெளியே வந்துவிடுவோம், அங்கே வெளியே உங்களால் எவ்வளவு கட்டற்ற விதமாக விடுதலையோடு இருக்க முடி

*யுமோ அவ்வளவு விடுதலையாக வந்து விடுவோம், சகோதரனே.*

*நீங்கள் உங்கள் கப்பற்பாயை (sail) பரலோகத்தை நோக்கி பொருத்தி விட்டீர்கள், எதுவுமே உங்களை எந்தவிதத்திலும் கலக்கவே முடியாது. நீங்கள் அந்த வழியாகப் போய்விட்டீர்கள்; அவ்வளவு தான். எதுவுமே உங்களுக்கு தீங்குசெய்ய முடியாது.*

**இப்பொழுது, வேதாகமத்தின்படி, இந்நாட்களில் ஒன்றில், அது அந்தவிதமான சபையாகத்தான் இருக்கப் போகிறது.**

**அங்கே (வேதாகமத்தில்) அந்தத் தூதன் அவருடைய கோபாக்கினையை ஊற்றி, வியாதிகள் வெடித்துக்கிளம்பின போது, மனிதர்கள் தாங்கள் நின்று**

**கொண்டிருக்கும் இடத்திலேயே அவர்களுடைய மாமிசமும்** *(flesh - சதை, உடம்பு, தசை - தமிழாக்கியோன்)* **கூட அழுகிப்போய்விடும்.**

**ஆகாயத்துப் பறவைகள் இறங்கி வந்து, தலைமை படைத்தலைவர்கள்** *(chief-captains - தலைமை அதிகாரிகள், தலைமைப்பணியாளர்கள், தலைமை படைப்பிரிவுத் தளபதிகள், தலைமை கடற்படைத்தளபதிகள், தலைமை இராணுவத் தலைவர்கள், தலைமை கப்பற்குழு முதல்வர்கள் - தமிழாக்கியோன்),* **மற்றும் மகத்தான மனிதர்கள், ஜனாதிபதிகள்** *(presidents - குடியரசுத்தலைவர்கள், கூட்டத்தலைவர்கள், மன்றத்தலைவர்கள், அவைத்தலை*

வர்கள், தலைமை அதிகாரிகள், அரசுத் தலைவர்கள், தலைவர்கள் - தமிழாக்கியோன்), **யுத்தவீரர்கள்** (*warriors* - மாவீரர்கள், போர்வீரர்கள், படைவீரர் கள் - தமிழாக்கியோன்), **இராஜ தூதர் கள்,** (*diplomats* - ராஜ்யப்பிரதிநிதிகள், அரசு தூதர்கள் - தமிழாக்கியோன்), **ஆட்சியாளர்கள்** (*potentates* - வல்லுநர்கள், ஆட்சி செய்பவர்கள், ஆளுநர்கள், அதிபதிகள், ராஜாக்கள் - தமிழாக்கி யோன்), **மற்றும் எல்லாருடைய புயங் களையும்** (*shoulders* - தோள், தோட் பட்டை, தோட்பட்டை இறைச்சி, தோட்கட்டு, புஜம் - தமிழாக்கியோன்), **படிப்படியாக தின்று அழிக்கும் (eat off), மேலும் அவர்களுடைய மாமிசத்தையும் தின்னும். தின்னும்...**

**ஆனால், "தங்கள் நெற்றியில் தேவனுடைய முத்திரையைப் பெற்றிருக்கிற யாருடைய அருகிலும் வராதே" என்று அந்த தூதனுக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது.**

*அது ஒரு... இருக்கப் போகிறது.* **இந்நாட்களில் ஒன்றில், தெய்வீக சுகமளித்தலானது ஜனங்கள் மத்தியில் ஒரு மகத்தான காரியமாக இருக்கப் போகிறது.** *எனவே நாம் நிபந்தனைக்குள் வந்துவிடுவோம். நாம்... என்று தேவன் விரும்புகிறார்.*

*நீங்கள், "நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள், 'நாம்' என்று கூறுகிறீர்களே" என்று சொல்லலாம். அதன்*


பேரில் தான் தேவன் காத்துக் கொண் டிருக்கிறார். தேவன்...

நாம் இயேசு திரும்பி வருவதற்காக காத்துக் கொண்டிருக்கிறோம், இயேசுவோ நம்பேரில் காத்துக் கொண் டிருக்கிறார்.

நீங்கள், “நல்லது, எவ்வாறு, அதைக் குறித்து நம்மால் என்னதான் செய்ய முடியும்?” என்று கேட்கலாம்.

வேளை வந்தது என்றும், அவரு டைய மணவாட்டி தன்னை ஆயத்தம் செய்து விட்டாள் என்றும் (அல்லே லூயா.), அவள் தன்னை ஆயத்தம் செய்து விட்டாள் என்றும் வேதாகமம் கூறுகிறது.





It’s too late then, it’s all over, see, and the Message will go to the totally lost; just like it did in the days of Noah, seven days in the ark.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-1127 — The World Is Again Falling Apart

13 **And the last name goes on that Book, or, the last name that's redeemed, that was put on that Book, that settles it, He comes to claim what He redeemed.**

And it might be a strange time.

**Did you ever think: people will go right on preaching, the church will go right on even thinking they're getting people saved.**

**It's too late then, it's all over, see, and the Message will go to**

**the totally lost; just like it did in the days of Noah, seven days in the ark.**

**It did in the days of Sodom.**

Jesus Himself, His—His third stage of His ministry, He went and preached to souls that were Eternally lost, that were in prison, that repented not, the longsuffering in the days of Noah.

**And we don't know what time these things might happen.**

14 **And let's be warned. Don't just stand around, let's do something about it.**

**If we're not right with God, let's get right with God.**

*63-1127 — The World Is Again Falling Apart*

Rev. William Marrion Branham




கடைசிகால
தீர்க்கதரிசனங்கள்
6
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து